
நீர் பெரியவர்
You Are Great
Album 25 Song 6
ஆல்பம் 25 பாடல் 6

Song 6 நீர் பெரியவர்

Psalm 104 – Beautiful hymn of praise for God's creation and sustaining power. From heavens to the smallest creatures, everything declares the greatness of the Lord.

நீர் பெரியவர்
நீர் மகத்துவர்
என்றென்றும் மகிமை நிறைந்தவர்
என் ஆத்துமா
கர்த்தரை ஸ்தோத்தரிக்கும்
தேவனாகிய கர்த்தரையே ஸ்தோத்தரிக்கும்

ஒளியை வஸ்திரமாகத் தரித்து
வானங்களைத் திரையைப் போல் விரித்திருக்கிறீர்
மேகங்களை உமது இரதமாக்கி
காற்றினுடைய செட்டைகளின் மேல் செல்லுகிறீர்

உம்முடைய தூதர்களை காற்றுகளாக்கினீர்
உம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜீவாலையாக்கினீர்
பூமியின் ஆதாரங்களை நீரே ஸ்தாபித்தீர் - அதை
வஸ்திரத்தால் மூடுவதுபோல ஆழத்தில் மூடினீர்

பர்வதங்களின்மேல் தண்ணீர்களை நிறுத்தினீர்
உமது கண்டிதத்தால் விலகியோட வைத்தீர்
உமது குமுறலின் சத்தத்தால் விரைந்தோடச் செய்தீர்
அவைகளை மலைகளில் ஏற்றி பள்ளத்தாக்கில் இறங்கச் செய்தீர்

பள்ளத்தாக்குகளில் நீரூற்றை வரவிடுகிறீர்
அவைகளை மலைகளின் நடுவே ஓடச் செய்கிறீர்
வெளியின் ஜீவன்களுக்கு தண்ணீரை கொடுக்கிறீர்
காட்டு மிருகங்களின் தாகத்தையும் தீர்க்கிறீர்

உம்முடைய மேல்வீட்டிலிருந்து தண்ணீரை இறைக்கிறீர்
பூமியிலிருந்து ஆகாரத்தை உண்டாக்குகிறீர்
மிருகங்களுக்கு புல்லை முளைப்பிக்கிறீர்
மனுஷருக்கு பயிரைத் தருகிறீர்

மனுஷரின் இருதயத்தை ஆகாரத்தால் ஆதறிக்கிறீர்
அவனை திராட்சை ரசத்தால் மகிழ்ச்சி படுத்துகிறீர்
முகத்திற்கு களைத்தரும் எண்ணெயை விளைவிக்கிறீர்
அவனின் தேவைகளையெல்லாம் நீரை சந்திக்கிறீர்

உயர்ந்த மலைகளில் வரையாட்டிற்கு அடைக்கலம் தந்தீர்
கண்மலைகளில் குழிமுசலுக்கு நீரே அடைக்கலம் தந்தீர்
காலக்குறிப்பை அறிய சந்திரனை படைத்தீர்
சூரியன் தன்னுடைய மறைவை அறியச் செய்தீர்

தண்ணீரால் நிறைந்திருக்கும் விருட்சங்களை நாட்டினீர்
லீபனோனின் கேதுரு மரங்களையும் நாட்டினீர்
தேவதாரு விருட்சங்களை கொக்குகளின் குடியிருப்பாக்கினீர்
அங்கே குருவிகளுக்கும் கூடுகட்ட இடம் கொடுத்தீர்

இருளைக் கட்டளையிட்டு இராக்காலமாக்குகிறீர்
அதிலே காட்டுஜீவன்களை நடமாட வைக்கிறீர்
தேவனாலே தங்களுக்கு ஆகாரத்தைத் தேடவரும்,

சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கிக் கொள்ளும்

உமது கிரியைகள் திரளாய் இருக்கிறது
அவைகளையெல்லாம் ஞானமாய் படைத்தீர்
பூமி உம்முடைய பொருட்களால் நிறைத்துள்ளீர்
சமுத்திரமும் அப்படியே நிறைந்து இருக்கிறது

கடலில் வாழும் ஜீவன்களைப் படைத்தீர்
கடலில் விளையாடும் திமிங்கலத்தையும் படைத்தீர்
கடலின்மேல் பெரிய கப்பல்கள் ஓடும்
கடலுக்குள்ளும் கப்பல்கள் ஓடுதே

ஏற்ற வேளையில் ஆகாரத்தைத் தருவீர்
ஏற்ற வேளையில் அவற்றின் சுவாசத்தை வாங்கிக்கொள்வீர்
உம்முடைய ஆவியால் எல்லாமே சிருஷ்டித்தீர்
நீரே பூமியின் ரூபத்தை புதிதாக்குகிறீர்

நீர் பூமியை நோக்கிப்பார்க்க அது அதிருமே
பர்வதங்களை தொட்டால் அவைகள் புகையுமே
கர்த்தரின் மகிமை என்றென்றைக்கும் விளங்குதே
என் ஆத்துமாவே கர்த்தரைப் போற்றிடு அல்லேலூயா.

நீர் பெரியவர்
நீர் மகத்துவர்
என்றென்றும் மகிமை நிறைந்தவர்
என் ஆத்துமா
கர்த்தரை ஸ்தோத்தரிக்கும்
தேவனாகிய கர்த்தரையே ஸ்தோத்தரிக்கும்

